<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>

வா.சா.1 தேதி.03.02.2026.

| OS.No. | 175/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | ரவீந்திரன் | த/பெ. | பாலச்சந்திரன் |
| வயது | 35 | தொழில் | துணை மேலாளர்,<br>ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா,<br>மயிலாடுதுறை. |
| கிராமம் | மயிலாடுதுறை | தாலுக்கா | மயிலாடுதுறை |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது. எனது தரப்பில் ஆவணங்களாக. 25.03.2015 தேதியிட்ட கடன் விண்ணப்பம் அசல் **வா.சா.ஆ.**1 ஆகவும், 25.03.2015 தேதியிட்ட Agreement for Term loan under education loan scheme அசல் **வா.சா.ஆ.2** ஆகவும், 25.03.2015 தேதியிட்ட Arrangement Letter அசல் **வா.சா.ஆ.3** ஆகவும், 03.04.2025 தேதியிட்ட Loan Account Statement அசல் **வா.சா.ஆ.4** ஆகவும், 18.03.2018 தேதியிட்ட Revivel Letter அசல் **வா.சா.ஆ.5** ஆகவும், 09.03.2021 Revival Letter அசல் **வா.சா.ஆ.6** ஆகவும், 05.02.2024 தேதியிட்ட Revival Letter அசல் **வா.சா.ஆ.7**ஆகவும், 21.08.2024 தேதியிட்ட Legal Notice நகல் **வா.சா.ஆ.8** ஆகவும், 26.08.2024 தேதியிட்ட Acknowledgment Card அசல் **வா.சா.ஆ.9** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. இந்த வங்கியின் மேலாளர் இந்த வழக்கிற்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க முழு அதிகாரம் எனக்கு உத்தரவு அளித்துள்ளார்கள் என வாய்மொழி உத்தரவாதம் அளித்துள்ளார். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.